**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.56/2022**

**வா.சா. – 1 – பாபுலால்**

**நாள். 07.07.2023**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என் சகோதரர் கணேசனின் இரண்டாவது மனைவி. என் சகோதரர் தன் மனைவியான பிரதிவாதிக்கும், எனக்கும் கூட்டாக 12.02.2015 ம் தேதியில் வழக்கு சொத்தை பொறுத்து தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் சகோதரர் கணேசனுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளார்கள். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்கப்பட்ட விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால், பத்திரம் எழுதிய ஒரு மாதத்தில் தெரியும். வழக்கு சொத்தின் சுவாதீனத்தை நான் எப்போது எடுத்து கொண்டேன் என்றால், 12.02.2015 ம் தேதியிலேயே சொத்தின் அனுபவம் எடுத்துக் கொண்டேன். சொத்தின் அனுபவம் எடுத்து கொண்டேன் என்பதை காட்ட ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் எந்த காலத்திலும் தாவா சொத்தின் அனுபவத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரர் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த பிறகு, அதன் அடிப்படையில் வருவாய் பதிவுகளை என் பெயரில் மாற்றி கொள்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால், நடவடிக்கை எடுக்கவில்லை. இதுநாள்வரை பட்டா மாற்றம் செய்து கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரப்படி எனக்கு பாதி பாகம் உள்ளது என்று கேட்டு, பிரதிவாதிக்கு அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. நான் கொடுத்ததாக சொல்லும் பொது அறிவிப்பு இந்த பிரதிவாதியை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பொது அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. 09.04.2022 ம் தேதிய பொது அறிவிப்பில் 14.03.2022 ம் தேதியில் அசல் ஆவணங்களை தொலைத்து விட்டேன் என்று குறிப்பிட்டு அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த தினமலர் நாளிதழின் பொது அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆகும். 15.04.2022 ம் தேதி இந்த பிரதிவாதி அதற்கு மறுப்பு தெரிவித்து பொது அறிவிப்பு தினமலர் நாளிதழில் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பொது அறிவிப்பில் அசல் தான செட்டில்மெண்ட் பத்திரம் தொலையவில்லை என்றும், அசல் தான செட்டில்மெண்ட் பத்திரம் என் சகோதரர் கணேசன் வசம் இருப்பதாகவும், அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிட்டதாகவும் குறிப்பிட்டு பொது அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போது அனைத்து ஆவணங்களும் பிரதிவாதி வசம் உள்ளதாக என் பிராதில்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கானது பிப்ரவரி மாதம் 2022 க்கு முன்பாகவே தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்புதான், கொடைக்கானலில் 14.03.2022 ம் தேதி அசல் ஆவணங்கள் தொலைந்துவிட்டதாக பொது அறிவிப்பு கொடுத்தேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. மேற்படி ஆவணங்கள் பிரதிவாதியிடம் இருப்பதாக பிராதில் கூறிவிட்டு, அவை 14.03.2022 ல் தொலைந்துவிட்டதாக பொய்யாக பொது அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து என் சகோதரர் கணேசன் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால், நானும் பணம் கொடுத்துள்ளேன். என் வருமானத்தை வைத்துதான், என் சகோதரர் கணேசனை படிக்க வைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் வருமானத்திலிருந்து 3 வது இலக்க சொத்தில் என் சகோதரர் கட்டிடம் கட்டினார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் மருத்துவராக தொழில் செய்தார். அந்த வருமானத்திலிருந்து தான் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றும், கட்டிடம் கட்டினார் என்றும் சொல்வது சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களை நாங்கள் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன். நாங்கள் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் சகோதரர் கணேசன் குற்ற வழக்கில் தண்டனை பெற்று சிறை சென்ற விபரம் எனக்கு தெரியும். என் சகோதரர் கணேசன் 2019 ம் ஆண்டு சிறைக்கு சென்றார். அவர் சிறைக்கு செல்லும் வரை, அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரே பராமரித்து வந்தார் என்றால் சரிதான். நானும்,என் சகோதரர் கணேசனும் நெருங்கி பழகி வந்தோம். எங்களுக்குள் எந்த விரோதமும் இல்லை. குடும்ப விசயமாக இருந்தாலும், சொத்து சம்பந்தப்பட்ட விசயமாக இருந்தாலும் என் சகோதரர் என்னிடம் கலந்து ஆலோசித்து தான் செய்வார். என் சகோதரர் கணேசன் வழக்கு சொத்து சம்பந்தமாக எழுதிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தை 29.12.2015 ம் தேதியில் ரத்து பத்திரம் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது. ரத்து பத்திரம் எழுதிய விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி ரத்து பத்திரத்தை பொறுத்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அதை பற்றி தெரியாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. ரத்து பத்திரத்தில் சொத்தின் சுவாதீனம் அனைத்தும் தன் வசமே உள்ளதாக கணேசன் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்தின் சுவாதீனத்தை எந்த காலத்திலும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருந்தால், வருவாய் துறையில் என் பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. தான செட்டில்மெண்ட் ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரர் கணேசன் சிறைக்கு செல்லும் வரை சொத்து சம்பந்தமாக நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

**என்றால் சரிதான். என் சகோதரர் கணேசன் சிறைக்கு சென்ற பிறகு, செட்டில்மெண்ட் ஆவணம் ரத்தான விபரம் தெரிந்து கொண்டு, தான செட்டில்மெண்ட்டில் எனக்கு இரண்டில் ஒரு பங்கு உள்ளது என்று சொல்லி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.10 10:35:33 +0530

Additional District Judge,

Dindigul.